(ஆ) உறுப்பினர்களது தொலைபேசிக்கு அனுப்பப்பெறும் தொகைப்பட்டியல் அதிகமாக இருப்பது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே தொலைபேசித் தொகை மிக அதிகமான அளவிலே அதாவது ஆயிரம் ரூபாய்க்கு மேலாக வசூலிக்கவேண்டும் என்று குறிப்புகள் வந்திருக்கின்றன அதுபற்றிய விரிவான விளக்கங்களைப் பல தடவை கேட்டும் ஒன்றுமே பதில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்கத்தான் தனித்தனியாக டெலிஃபோன் கனெக்ஷன் கொடுக்கப்பட்டது. (குறுக்கீடு) ஒரு மாதத்திற்கு 100 கால்கள் ஃப்ரீயாகத் (free) தரப்பட்டிருக்கின்றது. அதற்கு மேல் போடுகின்றபோதுதான் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. கட்சி நடத்துகின்றவர்களைப் பார்ப்பதற்கு நிறையபேர்கள் வரக்கூடும். ஆகவே ஆயிரம் ரூபாயில் வருகின்றது என்பது அவ்வளவு அதிகமான ஒன்றல்ல. இதற்காகத்தான் முன்பே சொன்னோம். தனித்தனியாக டெலிஃபோன் கனெக்க்ஷன் வேண்டும் என்றால் பில் ஜாஸ்தியாக வரும் என்று சொன்னோம். அவ்வாறு சொல்லியும் கேட்காத காரணத்தால் தான் தனித்தனியாக வைக்கப்பட்டது. அவ்வாறு தனித்தனியாக வைப்பதற்கு 20 இலட்சம் ரூபாய் செலவாகி இருக்கின்றது. உங்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அவ்வாறு செய்தோம். ஆகவே ஏற்படுகின்ற நிலைமைகளை அனுபவிக்க வேண்டியதுதான்.

(இ) சென்னிமலைக் கோவில்—கோவை மாவட்டம்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, எல்லோருக்கும் எல்லா உரிமையும் உண்டு என்பதை அரசியல் சட்டம் வகுத்திருக்கின்றது. அதை எல்லோரும் அனுபவிக்கிறார்கள். ஆனால் கோயம்புத்தூர் மாவட்டத்திலே சென்னிமலையில் மலைமேலே ஒரு சாமி இருக்கின்றது.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மாட்டு வண்டி ஓட்டிய பிரச்சினையைக் கொண்டு வருகிறீர்கள் என்று தெரிகின்றது. திடீரென்று அப்பிரச்சினையைக் முன்னறிவிப்பின்றி இங்கே எழுப்புவது சரியல்ல............... (குறுக்கீடுகள்)........... இப்போது திடீரென்று கொண்டு வந்தால் அதற்கு யார் பதில் சொல்ல முடியும்? ஏதாவது ஒரு விதியின் கீழ் முன்னறிவிப்புக் கொடுங்கள்.